1971 டிசம்பர் 11]

கால்நடை ஊர்தி மருத்துவ மனைகள்

*258 வினா—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை ஆஸ்பத்திரிகள் தற்போது எத்தனை? எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தற்போது முகவை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் ஏதும் இல்லை.

நடமாடும் கால்நடைகளுக்கு மருத்துவ மனை இருக்கிறது. (சிரிப்பு.)

திரு. கா. காளிமுத்து: அவ்வாறு இல்லாததால், கால்நடைகளை வியாதிவந்த காலத்தில் மருந்தகங்களுக்கு அழைத்துச் செல்ல மிக்கக் கஷ்டமாக இருப்பதால், நடமாடும் மருத்துவமனையை முகவை மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இரண்டாண்டுகளுக்கு முன்னாலே கால்நடைத் துறை சீரமைக்கப்பட்டது. அப்பொழுது இந்த கால்நடைப் பராமரிப்புக்காக நடத்தப்பட்ட மருத்துவ மனைகள் கைவிடப்பட்டன. இதனால் சிவகங்கை, விருதுநகர் ஆகிய இடங்களில் இரண்டு நிலையங்கள் மூடப்பட்டன. சீரமைப்புக்குப் பின் கால்நடைச் சிகிச்சைக்காகத் துணை மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டதால், ஒவ்வொரு கிராமத்திற்கும், 3, 4 மைல் சுற்றளவில் மருத்துவ மனைகளாக இருக்கின்றன. அவற்றை மோட்டார் வான்கள் மூலமாக அந்த அந்த பகுதிகளுக்குக் கொண்டுசென்று பணியாற்றுவது என்ற அடிப்படையில் அவை செயல்படுத்தப்பட்டால், மேலும் தேவையிருக்காது என்பது ஆலோசனையில் உள்ளது.

கிருஷ்ணராயபுரம்—மைலம்பட்டி சாலை

*259 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம்—மைலம்பட்டி சாலையிலிருந்து கோவில்பட்டி, குச்சிப்பட்டி, சேவகனூர்களை இணைக்க, சீரணிமூலம் புதிய சாலை ஒன்று போட எப்போது வேலை துவங்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) 1967-68-ல் துவங்கப்பட்டது.

(இ) பட்டா நிலத்தில் சாலை அமைக்க வேண்டியிருந்ததால் நிலச் சொந்தக்காரர்களின் ஒப்புதல் பெறுவதில் தடங்கல் ஏற்பட்டதால் பணி முடிவடையாமல் இருந்தது. தற்போது நிலச் சொந்தக்காரர்கள் நிலம் வழங்க ஒப்புதல் அளிக்க ஒத்துக்கொண்டதால் மேற்படி சாலை டிசம்பர் திங்களுக்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சீரணித் தலைவர்களுக்கு ஜீப் கார்கள்

*260 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட சீரணிப்படைத் தலைவர்களுக்கு ஜீப் கார் ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?